**கலிகமுவ பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலிகமுவ பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 21(இ) பிரிவின் பிரகாரம் உரிமை மூலதன மாற்றக்கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 21(உ) பிரிவின் படி உரிய நிறுவனத்தின் பாதிடப்பட்ட தரவுகளுடன் உள்ளபடியான தரவுகள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டிற்காக முத்திரைக் கட்டணம் தயாரிப்பதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 54,125 தொகை காணிப் பதிவாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் ஊக்குவிப்புப் படிகள் மீளாய்வாண்டின் வருமானத்தில் சிராக்கப்பட்டமையால் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கில் ரூபா 8,602,682 தொகையான மீதியில் சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளருக்குரிய ரூபா 1,090,000 தொகையான உழவு இயந்திரம் மற்றும் ரூபா 260,000 தொகையான டேலர் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 7,740,000 பெறுமதியான கெப் வாகனம் மீளாய்வாண்டின் போது கடன் அடிப்படையில் ஆரம்பமாக ரூபா 4,700,000 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கான கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியுடன் ரூபா 4,858,962 கூட்டுத்தொகை ஆண்டின் கணக்குகளில் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதியின் அடிப்டையில் வருடாந்த பெறுமானத்தேய்வு ஏற்பாடாக ரூபா 485,896 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கெப் வாகனத்தின் உள்ளபடியான சந்தைப் பெறுமதியாக ரூபா 7,740,000 பெறுமதியும் மேலும், செலுத்த

வேண்டிய (ரூபா 9,111,020 - ரூபா 4,858,962) ரூபா 4,252,058 தொகையான கடன் மற்றும் வட்டிப் பெறுமதியும் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துப் பதிவேட்டில் காணியும் கட்டிடத்தின் கீழ் காணப்படுகின்ற 18 மயான நிலங்களும், 06 காணிகளும், 02 சனசமூக மண்டபங்களும் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தன.

(உ) நிலையான சொத்துப் பதிவேட்டின் படி ரூபா 66,000 பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றும், ரூபா 1,685,602 பெறுமதியான இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களில் 07 விடயங்களும் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தன.

### 1.3.3 நிகழத்தக்க பொறுப்புக்கள்

சபையின் சொத்துக்களுக்கள் மற்றும் பொறுப்புக்களுக்குரிய சட்டரீதியானதும் ஏனைய கடப்பாடுகள் தொடர்பாகவும் காணப்படுகின்ற நிகழத்தக்க பொறுப்புக்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

19 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,474,487 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,350,739 ஆனமையால் வேறுபாடு ரூபா 1,123,748 ஆகும்.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 704,444 ஆக இருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 14 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட செயல் நிமித்த முற்பணம் ரூபா 337,220 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம்

| | |
|---|---|
| 132(ஒ) பிரிவு | பிரதம அமைச்சரின் அங்கீகாரமின்றி 6 சந்தர்ப்பங்களின் போது ரூபா 250,000 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,675,551 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,556,882 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,881,331 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினம் ரூபா 2,824,772 இனால் அதிகரித்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,325 | 2,175 | 150 |
| (ii) | வாடகை | 413 | 413 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 740 | 640 | 100 |
| (iv) | ஏனைய வருமானம் | 9,825 | 12,148 | - |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 131,000 ஆகவும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 6,200,479 ஆகவும் இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,987,415 ஆக இருந்தது.

**3.2 செயற்பாடற்ற / வுறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

சபைக்குரிய வங்கிக் கணக்கொன்றில் ரூபா 46,582 தொகையான மீதியொன்று செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் (பிரதேச சபை) நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்